சுமார் 19 ஆண்டுகளாக சந்தா கொடுக்காமலும் சங்கத்தின் பக்கமே வராமலும் இருந்த திரு. ஜெயபால் மோகன் தன் மீது உள்ள துறை சார்ந்த ஊழல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள், தொலைதூர பணி மாற்றல் ஆகியவற்றிலிருந்து சங்க பொறுப்பாளர் பதவியை தவறாக நயவஞ்சகமாக பயன்படுத்தி, தன்னை காப்பாற்றிக் கொள்ள சங்கப் பொறுப்பாளராக வந்து இதுவரை தமிழ்நாடு பொறியியல் சங்க வரலாற்றில் இல்லாத அளவிற்கு நயவஞ்சகமாக, தன் சுயநலத்திற்காக சங்கத்தின் பெயரை பயன்படுத்துதல், சங்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயல்படுதல், சங்கப்பணிகளை ஆற்றாமலும், சங்கத்தை தன்னுடைய மலிவான விளம்பரத்திற்கு பயன்படுத்துதல், கொலை மிரட்டல் வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளிவந்தது, செய்தி பத்திரிக்கைகளில் வெளிவந்தது உள்ளிட்ட பல்வேறு காரணங்களினாலும், அனைத்துக் கிளைச் சங்க பொதுக்குழுக் கூட்டங்களிலும் இவருக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதின் அடிப்படையிலும், இவரை சங்கப்பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கி தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, தன்னுடைய குற்றங்களை, அராஜகங்களை கண்டிப்பவர் மகாத்மா காந்தியாக இருந்தாலும், கடவுளாக இருந்தாலும்

கூட அவர்கள் மீதே அபாண்டமாக, பொய்யாக, நியாய தர்மங்களுக்கு கொஞ்சமும் கட்டுப்படாமல் களங்கம் கற்பிக்கும் குணமுடைய திரு.ஜெயபால் மோகன் மையச்சங்க பொறுப்பாளர்களிடம் அநாகரீகமாக அபாண்டமாக பேசியது, கடிதங்கள் எழுதியது, தந்திகள் கொடுத்தது மற்றும் சென்னைக் கிளைச்சங்க தேர்தலில் இரண்டு பதவிகளுக்கு வேட்புமனு தாக்கல் செய்து ஒரு பதவிக்கு மட்டும் போட்டியிட தகுதிபெற்று அதில் படுதோல்வி அடைந்த பிறகு மையச்சங்க தேர்தலில் போட்டியிட இவருக்கு அனுமதி அளித்தும் இவர் மையச்சங்க தேர்தலில் போட்டியிட அவர் வேட்புமனுவை தாக்கல் செய்யக் கூட இரண்டு பொதுக்குழு உறுப்பினர்கள் கிடைக்க மாட்டார்கள் என்பதால் மையச்சங்க தேர்தலை எதிர்கொள்ளவும்,

இவர் செய்த வெளிப்படையான குற்றங்களுக்கு பதில் சொல்ல முடியாது என்பதாலும் மாநில பொதுக்குழுவில் கலந்துக் கொள்ளவும் துணிவில்லாமல் சங்கத்தில் ஒட்டு மொத்தமாக அனைவரும் இவரை எதிர்க்கிறார்கள் என்று தெரிந்திருந்தும் சங்க பதவியை தக்க வைத்துக்கொண்டு தன் சுயநலத்திற்காக பதவியை தவறாக பயன்படுத்த, மையச்சங்க தேர்தலை நடத்தக்கூடாது என்றும் தான் அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பதவியில் தொடர வேண்டும் என்றும் (To Maintain Status quo) நீதிமன்ற தடையாணைக்கு முயற்சி செய்து தோல்வி அடைந்தது, சங்கத்தில் தான் உறுப்பினராக தொடர வேண்டும், தான் அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பதவியில் தொடர வேண்டும், மையச் சங்க தேர்தலை நடத்தக் கூடாது, (சென்னைக் கிளை தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வி அடைந்த பிறகு) சென்னைக் கிளை தேர்தல் உட்பட அனைத்து கிளைகளின் தேர்தல்களில் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும் அதனால் அனைத்து கிளைகளின் தேர்தல்கள் செல்லாது என அறிவிக்க வேண்டும், நூற்றாண்டு விழா நடத்தக் கூடாது என்றும் தன் பெயரிலும் இவரின் நண்பர் திரு.சிவக்கொழுந்து பெயரிலும் சென்னை சிட்டி சிவில் கோர்ட்டில் தொடுத்துள்ள மூன்று வழக்குகள் O.S. No. 7563 of 2011, O.S. No. 7447/2011, O.S. No. 7962 of 2011 பற்றியும், உலகிற்கே தெரிந்த உண்மைகளை கூட மறுத்து கொஞ்சம் கூட கூச்சப்படாமல் பொய் பேசும் குணமுடைய இவர், நேர்மையற்ற குறுக்கு வழியில் காரியங்களை சாதிக்கும் குணமுடைய இவர் நீதிமன்றத்திற்கே அப்பட்டமான பொய்யான தகவல்களை அளித்திருப்பது தன்னுடைய குற்றங்கள் மீது நடவடிக்கை எடுப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை பழிவாங்க துடிக்கும் அராஜக குணமுடைய இவர், இவர் மீது நடவடிக்கை எடுத்த சங்கத்தையே முடக்க முயற்சிப்பது சம்பந்தமாகவும் விவாதிக்கப்பட்டது.

தன் மீது உள்ள ஊழல் உள்ளிட்ட துறைசார்ந்த குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள நயவஞ்சகமாக சங்கத்தின் பெயரை, சங்கப் பதவியை தவறாக பயன்படுத்தி உயர்நீதி மன்றத்தில் இரண்டு வழக்குகள் தொடுத்தது, (WP NO. 20354/2010 மற்றும் WP NO.23235/2010) உள்ளிட்ட ஏராளமான தவறுகள் புரிந்த திரு. ஜெயபால் மோகன் அவர்களை சங்க அடிப்படை உறுப்பினரிலிருந்து நீக்கி தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு ஏற்பட்ட களங்கத்தை துடைக்க வேண்டும் என்று மாநில பொதுக்குழு ஏகமனதாக கருத்து தெரிவித்தது. ஆனால் இவர் சங்கத்தில் உறுப்பினராக தொடர்வது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு இது சம்பந்தமாக முடிவெடுக்கலாம் என இப்பொதுக்குழு முடிவு செய்தது.

**தீர்மானங்கள்:**

18. சென்னையில் 26.06.2011 மற்றும் 09.07.2011 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மையச்சங்க பொறுப்பாளர்கள் கூட்டத்தில் திரு.ஜெயபால் மோகனை அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கியதற்கு இம்மாநில பொதுக்குழு ஏகமனதாக பின்னேற்பு செய்து ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றுகிறது.

19. திரு.ஜெயபால் மோகன் இதுவரை தமிழ்நாடு பொறியியல் சங்க வரலாற்றில் இல்லாத அளவிற்கு சங்கத்தின் விதிகளுக்கு புறம்பாகவும், சங்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்டு பல்வேறு தவறுகள் புரிந்ததாலும் அனைத்து கிளைச் சங்க பொதுக்குழு கூட்டங்களிலும் திரு.ஜெயபால் மோகன் அவர்களுக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதின் அடிப்படையிலும் பாரம்பரியமிக்க தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் காப்பாற்றுவதற்காக திரு.ஜெயபால் மோகன் அவர்களை சங்க உறுப்பினரிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்கு நீக்கி வைப்பது என்று இம்மாநில பொதுக்குழு ஏகமனதாக கருத்து தெரிவித்தது.

ஆனால் இவர் சங்க உறுப்பினராக தொடர்வது சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு இது சம்பந்தமாக முடிவு எடுக்கலாம் என்று இம்மாநில பொதுக்குழு தீர்மானிக்கிறது.

20. திரு. ஜெயபால் மோகன் தன்மீது உள்ள துறைசார்ந்த ஊழல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளிலிருந்தும், அதன் தொடர்பான நடவடிக்கைகளிலிருந்தும் தன்னை காப்பாற்றிக் கொள்ள தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச்சங்க பொறுப்பாளர் பதவியை நயவஞ்சகமாக, தவறாக பயன்படுத்தி தொடுத்துள்ள வழக்கு எண். (WP NO. 20354/2010 மற்றும் WP NO.23235/2010) ஆகிய இரண்டு வழக்குகளில் தமிழ்நாடு பொறியியல் சங்கம் பிரதிவாதியாக இணைந்து (Implead) இவர்மீது உள்ள குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் அவர்மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க மாநில பொதுக்குழு தீர்மானிக்கிறது.

21. திரு. ஜெயபால் மோகன் தொடர்ந்து சங்கத்திற்கு ஏதாவது இடைஞ்சல் கொடுக்கும் பட்சத்தில் அவர்மீது உரிய எதிர் நடவடிக்கை எடுக்க மையச்சங்க பொறுப்பாளர்களுக்கு (Central Cabinet) முழு அதிகாரம் அளித்து இம்மாநில பொதுக்குழு தீர்மானிக்கிறது.

22. திரு. N. சிவக்கொழுந்து சென்னைக் கிளை உறுப்பினர் தன்னுடன் படித்த இவரின் நண்பர் திரு. ஜெயபால் மோகனை சங்கப்பதவியிலிருந்து நீக்கியதை தொடர்ந்து சங்கத்திற்கு எதிராக அநாகரீகமாக, அராஜகமாக தொடர்ந்து செயல்பட்டு வருவதால் இவர்மீது அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க மையச்சங்க பொறுப்பாளர்களுக்கு (Central Cabinet) முழு அதிகாரம் அளித்து இம்மாநில பொதுக்குழு தீர்மானிக்கிறது.

## இரங்கல் செய்தி

மையச் சங்க அமைப்பு மற்றும் சட்ட செயலாளர் பொறி. K. கமால்தீன், உதவி செயற்பொறியாளர் அவர்களின் மாமனார் திரு. ஜமால் முகமது ராவுத்தர் அவர்கள் 17.09.2014 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

அனுப்புதல்

நா. கோவிந்தராஜன்,
பொருளாளர்,
தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர்கள் சங்கம் (REAT)
மதுரை மண்டலம், மதுரை.



பெறுநர்

பொறி. D. முருகேசன்,
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சென்னை.

அய்யா,

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவை, சிறப்புடன் நடத்தி முடித்ததற்கு, முதற்கண் எனது பணிவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவில் பங்கேற்க வாய்ப்பளித்த இறைவனுக்கும் நன்றி கூறுகிறேன்.

நான் பொதுப்பணித்துறையில் வேலை உதவியாளராக (Work Assistant) பணியில் சேர்ந்து, 34 ஆண்டுகள் பணிபுரிந்து, இளம் பொறியாளர் (சிறப்பு நிலையில்) ஓய்வு பெறும் வரை, தமிழ்நாடு பொறியியல் சங்கம் செய்த பணிகளை கூறாவிட்டால் நன்றி மறந்தவனாவேன். முதலில் வேலை நிதிப்பணியிலிருந்து, நிரந்தரமாகியது. பின் வறட்சி நிவாரண பணி துவக்கப்பட்டபோது, இளநிலைப் பெறியாளராக பணி வாய்ப்பு பெற்று தந்தது. அதில் சிறப்பு தேர்வுக்கு ஏற்பாடுசெய்து நிரந்தரமாக்கியது. முன் தேதியிட்டு வரன்முறை பெற்றுதந்து, அதன்மூலம் தேர்வு நிலை, சிறப்பு நிலை பெற்றது இதிலெல்லாம், சங்கத்தின் முயற்சி இல்லாமல் கிடைத்திருக்க முடியாது. ”தங்கத்தால் முடியாததெல்லாம் சங்கத்தால் முடியும் என்று கருதுபவன் நான். ஆகையால் சங்கத்தால் பெற்ற நன்மைகளை கூறாவிட்டால் நன்றி மறந்தவனாவேன்.

நிற்க தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது வரலாற்றில் பல தலைமைகளை கண்டுள்ளது. அதில் ஒரு சிலர் தான் தன் முத்திரையைப்பதித்து சென்றுள்ளனர். அதில் நான் அறிந்த வரை, பொறி. அப்பாஸ்மந்திரி, பொறி. சண்முகப்பெருமாள், பொறி. சி.ப. சண்முகம், பொறி. T. ஜானகிராமன் ஆகியோர் சிலர். அவர்களுக்கு ஏராளமானோர் தோள்கொடுத்து சங்கத்தை வலிமையான நிலைக்கு கொண்டு வந்துள்ளனர்.

பொறி. சி.ப. சண்முகம் அவர்களுக்குப்பின், சிறிது தொய்வுடன் இருந்த TNEA தங்களின் தலைமையில் பீடு நடைபோடுகிறது என்பது, நூற்றாண்டு நிறைவு விழாவைப் பார்த்தவுடன் எனக்கு ஏற்பட்டது.

”லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்” என்று உங்களது வாகனத்தில் எழுதியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த மாதிரி ஒரு நபர் தலைமையேற்றதால் தான் TNEAவின் மதிப்பு அரசு மட்டத்திலும், அதிகாரிகள் மத்தியிலும் கூடியுள்ளது என்பது என் கருத்து. இதற்கு 2008ம் ஆண்டு செயற்பொறியாளர் பதவி உயர்வு தாங்கள் பெற்று தந்ததே சாட்சி.

நூற்றாண்டு விழாவிற்காக, தாங்கள் ஏற்பாடு செய்திருந்த இடம், அழைத்திருந்த நபர்கள், சிறப்பு அழைப்பாளராக உலகம் வியந்த விஞ்ஞானி, தமிழர் டாக்டர். A.P.J. அப்துல் காலம் அவர்களை ஏற்பாடு செய்த பாங்கு அனைத்தும் சிறப்பு. ஒரு சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் என்னென்ன செய்யவேண்டுமோ! அனைத்தும் சிறப்புடன் இருந்தது. சங்கத்தை

உருவாக்கி பாடுபட்ட மூத்த உறுப்பினர்களை கௌரவித்தல், சங்க வரலாற்று ஆவணப்படம் வெளியீடு, சங்கத்திற்கான வாழ்த்துப்பாடல் வெளியீடு, சிறப்பான என்றும் மனதில் பதிய வைக்கும் நிகழ்ச்சிகளை அமைத்திருந்தது சிறப்பு. மொத்தத்தில் நூற்றாண்டு விழா சிறிது கால தாமதமாக நடைபெற்றதற்கான அடையாளமே தெரியாத வகையில் சிறப்பாக இருந்தது.

எந்த பொது அமைப்பிலும், பொறுப்பாளர்களுக்கு பாராட்டுதலும் விமர்சனங்களும் இருக்கத்தான் செய்யும். எது இருந்தாலும் ”போற்றுவார் போற்றலும், தூற்றுவார் தூற்றலும் போகட்டும் கண்ணனுக்கே” என்ற கீதையின் வாசகப்படி தொடர்ந்து செயல்பட்டு வெற்றிகளை குவிக்க வாழ்த்துகிறேன்.

மதுரை
15.09.2014.

அன்புடன்,
நா. கோவிந்தராஜன்

---



அனுப்புநர்

திரு. சு. செயராமகிருட்டிணன்,
இளநிலைப் பொறியாளர் பணி நிறைவு,
62/42சி, வெங்கடாசலம் தெரு,
சிவகங்கை - 630 561.
செல். 94864 14814.

பெறுநர்

பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
பொதுப்பணித்துறை,
சென்னை - 600 005.

அய்யா,

பொருள்: நூற்றாண்டு நிறைவு விழா - தொடர்பாக.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் நூற்றாண்டு நிறைவு விழா 05.09.2014 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதில் பங்கு பெற என்னை அழைத்ததற்கு நன்றி. அவ்விழாவில் என்னை மட்டுமின்றி பங்குபெற்ற அனைத்து மூத்தப் பொறியாளர்களையும் பொன்னாடை அணிவித்து கௌரவித்ததற்கு அனைவரது சார்பாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெற்ற இந்த விழா மிகவும் சிறப்பானதாகவும் எனது வாழ்நாளில் மறக்கமுடியாத நாளாக அமைந்துவிட்டது. மேலும் இந்த விழாவில் கலந்து கொண்ட சிறப்பு அழைப்பாளர்களான அனைத்து சங்கபொறுப்பாளர்களும் சிறப்பாக வாழ்த்துரை வழங்கினார்கள்.

திரு கு. ஞானசம்பந்தன் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை சொற்பொழிவு கருத்துக்களுடன் நகைச்சுவையாக இருந்தது. மற்ற சிறப்பு விருந்தினர்கள் ஆற்றிய வாழ்த்துரைகளும் மனதை கவர்ந்தது. நமது மேதகு முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரையும், மேலும் பொறியாளர்கள் அனைவருக்கும் நாம் வருங்காலத்தில் கவனத்தில் கொள்ளவேண்டிய அவர் வழங்கிய கருத்துக்கள் அனைத்தும் முத்துக்களாக இருந்தது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் நூற்றாண்டு நிறைவு விழாவினை மிகவும் சிறப்பாக நடத்தி முடித்த தமிழ்நாடு பொறியியல் சங்க மையச்சங்க, கிளைச்சங்க பொறுப்பாளர்கள் அனைவருக்கும் இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய நெல்லை ஜெயந்தா அவர்களுக்கும் எனது சார்பாகவும் அடியேன் சார்ந்துள்ள தமிழ்நாடு ஓய்வுபெற்ற பொறியாளர்கள் சங்கம் சார்பாகவும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள்: 06.09.214.

அன்புள்ள,

சு. செயராமகிருட்டிணன்.

## செப்டம்பர் 2014 மாத பொறியாளர் இதழில் இருந்து

**Fix a Minimum Qualification for all Section Level posts in PWD as a Degree in Engineering**

1. To Enhance the qualities in Public Works Department, Degree in Engineering either full time or part time shall be made as a basic qualification for all the section level posts and they must be recruited only through TNPSC, as TNPSC is conducting Examinations in to stages (written and oral) and selecting efficient candidates as Assistant Engineers (one out of 30 applicants).

2. The minimum qualification prescribed for professionals like practising advocates are BL / BGL and for the allopathy Doctors are MBBS, whereas, in the Engineering Departments the qualifications are fixed as degree / diploma for the section level posts even in these modern days. Advanced technical knowledge and higher skills are must for handling works pertaining to sections to cope up with modern trends.

3. Five hundred and more Engineering Colleges in Tamil Nadu alone produce Five thousand and more graduated civil engineers every year who are also having computer skills in addition. Sufficient number of out-coming graduates are available to meet the demand of all engineering departments including Public Works Department.

4. Competent graduated engineers screened through TNPSC Exams alone can meet the standards of State funding Agencies such as World Bank, Central Government and other International Agencies for obtaining fund and for efficient planning investigation. Designing, estimation and supervision etc., High rise buildings with provisions to earth quake resistance are proposed and executed with high technical skills. Maintaining the standards of reservoirs and up-keeping the records for assessing the Dam Safety are possible only if these Sections are posted / filled with graduated engineers recruited by TNPSC. These eminent engineers alone can meet the challenges of the department.

5. A special order is paving backdoor way for the working diploma holders at sections and overseers, draughtsman, Technical Assistants in departments are becoming redesignated Assistant Engineers after acquiring part time BE degree without undergoing TNPSC exams. Highly competent and qualified graduated / Degree engineers recruited through TNPSC are frustrated as their seniorities are badly affected by the redesignated Assistant Engineers who have not been screened and not recruited though TNPSC which deteriorates the quality of PWD.

6. It is open and clear to everyone in the department that the graduated engineers who posses more qualification (B.E) and possess high technical knowledge shall be recruited only through TNPSC every year for all the section level posts to make the Department more serviceable and more efficient.

- Editor

தொழில்நுட்ப பணியிடங்களில் இருந்து பணிமாறுதலில் உதவிப் பொறியாளராக அரசாணை எண். 1 பொதுப்பணித்துறை நாள். 02.01.1990 மூலம் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டவர்களை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களது பணிகளை பணிவரன்முறைபடுத்தி கடந்த 28.07.2014 அன்று முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.அ மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., அவர்கள் ஆணை வழங்கியுள்ளது மிகுந்த வருத்தத்தினை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு பொறியியல் பணியமைப்பு விதிகளில் இடம்பெறாத தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களை உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கான ஊட்டுப் பதவியில் இடம்பெற செய்யக்கூடாது என வலியுருத்தி வழக்கு தொடரப்பட்டது. மாண்புமிகு நீதியரசர் S. பிரதாப் சிங் அவர்கள் மேற்படி ஆணையினை எதிர்த்து தமிழ்நாடு மாநில தீர்ப்பாயத்தில் தொடரப்பட்ட வழக்கில் தமிழ்நாடு பொறியியல் பணியமைப்பு விதிகளுக்கு விதிதிருத்தம் வழங்கப்படாத நிலையில், தொழில்நுட்ப உதவியாளர்கள் உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கு ஊட்டுப் பதவியாக கருத முடியாது என தீர்ப்பளித்துள்ளார். மேலும், இது தொடர்பான மேல்முறையீடு மனுவில், மாண்புமிகு நீதியரசர் P. சதாசிவம் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்கண்ட தீர்ப்பை சரியானது என தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப உதவியாளர்களை உதவிப் பொறியாளராக பணிநியமனம் செய்யக்கூடாது என வலியுறுத்தி அரசு முதன்மைச் செயலாளர், பொ.ப.து., அவர்களையும், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.அ மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., அவர்களையும் பலமுறை வேண்டி கேட்டுக் கொண்டுள்ளோம். இருப்பினும், மேற்படி உதவிப் பொறியாளர்களின் பணிகளை வரன்முறைபடுத்தி ஆணையிட்டுள்ளது மிகுந்த மனவேதனை அளித்துள்ளது. மேற்படி பணிநியமனம் மற்றும் பணிவரன்முறை ஆணைகள் எதிர்த்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருநெல்வேலி கிளை:-**

1. பொதுப்பணித்துறை மின்பொறியாளர்களின் பதவி உயர்வு தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில் Civil பிரிவிலும்

பதவி உயர்வு 75% விழுக்காட்டை தேர்வாணயம் மூலம் தேர்வு செய்யப்பட்ட பொறியாளர்களுக்கு மட்டுமே வழங்கிட அரசுக்கு வலியுறுத்த இக்கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

2. தொழில்நுட்ப உதவியாளர்களிலிருந்து G.O. Ms. No. 1 மூலம் உதவிப் பொறியாளர்களாக பணி நியமனம் பெற்றவர்களுக்கு உதவிப் பொறியாளர்கள் பணியில் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணைக்கு உயர்நீதிமன்றத்தின் மூலம் தடையாணை பெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள இக்கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**Appointment of Technical Assistants as Assistant Engineers - Regularisation Order issued - Opposing.**

**Lr. No. 001 / GS / AOE / 2014 - 48** **Date: 25.08.2014.**

To

The Engineer - in - Chief, WRO and

Chief Engineer (General), PWD.,

Chepauk, Chennai - 600 005.

Sir,

**Sub**: TNPWD - Establishment - TNES - Appointment of Tech. Assistants as Assistant Engineers - Regularisation Order issued - Opposing - Reg.

**Ref**: 1. Our representation Lr. No. 001 / GS-AOE / 2013 - 9 Dated: 10.12.2013 addressed to E-in-C (B) & CE (B), Chennai Region & CE (Gl), PWD.

2. Our representation Lr. No. 001 / GS - AOE / 2014 - 34 Dated: 10.06.2014.

3. E-in-C, WRO and C.E., (Gl), PWD Proceeding No. S2(2) / 29148 / 2004 dated: 28.07.2014.

We are very much shocked to hear that the Engineer - in - Chief, WRO and Chief Engineer (General), PWD vide reference 3rd cited has regularized the services of 21 Nos. of Assistant Engineers who were temporarily appointed by recruitment by transfer from the post of Technical Assistant during the year 2006 as per G.O. Ms. No. 1 PW (B2) dept. Dated: 02.01.90.

We are repeatedly representing the Principal Secretary to Government, PWD., and the Engineer - in - Chief, WRO and the Chief Engineer (General), PWD not to regularize the services of those Assistant Engineers recruited by transfer from the category of Technical Assistants, since the post of Tech. Assistants does not include either in the Tamil Nadu Engineering Service (TNES). Special Rules or in the Tamil Nadu Engineering Subordinate Service Rules (TNESS).

Eventhough, the said post is included as a feeder category post for Assistant Engineers by way of recruitment by transfer by passing the G.O. Ms.No. 1 PW (B2) Dept. Dated: 02.01.1990. no amendments are issued till now in the relevant Special Rules for the TNES and TNESS respectively.

We wish to remind that the Hon'ble Tamil Nadu Administrative Tribunal chaired by Hon'ble Mr. Justice S. Pratap Singh in OA No. 4564 / 94, has passed a common order that, till amendments are made appropriately, the statutory rules, as it now stands will prevail and hence the Technical Assistant do not come in as a feeder from which recruitment by transfer can be made for the post of Assistant Engineers and rejected the claims of Technical Assistants as Assistant Engineers.

The Hon'ble Mr. Justice P. Sathasivam and Hon'ble Mr. Justice S. Tamilvanan in the High Court of Judicature at Madras in WP. No. 7523 of 1997 dated 06.11.2006 also did not find any veryings of above Hon'ble Tribunal Order.

We also wish to remind that, the appointments of those Technical Assistants as Assistant Engineers were Challenged before the Hon'ble High Court of Madras in WP. NO. 11148 / 2007 and WP. No. 21344 / 2007. Also, SLP No. 2495 / 07 is filed before the Hon'ble Supreme Court of India Challenging the G.O. Ms. No. 1 PW (B2) Dept. Dated: 02.01.1990.

Such being the facts, the regularization order issued by the Engineer - in - Chief WRO & Chief Engineer (General), PWD is against the existing service rules. We also very much concerned by the above order and feels that injustice is caused to us eventhough Court Judgemets are available, adding fuel to the burning fire our members are very much agitated by the above order and we did not have any other solution except finding legal remedy for the above order.

We, therefore, request the Engineer - in - Chief, WRO & Chief Engineer (General), PWD to withdraw the above order and implement the orders passed in Hon'ble High Court of Madras.

Thanking You,

Yours,

Er. P. KARTHIKEYAN
General Secretary / AEA

Er. R. RAVIRAJ
General Secretary / AOE

---

**Interest - Rate of Interest on Leans and Advances sanctioned by the State Government - Interest rates for the year 2014 - 2015 - Orders - Issued.**

**Finance (Loans and Advances Cell) Department**

**G.O. No. 186, Dated 8th July 2014**

(Jaya, Ani 24, Thiruvalluvar Aandu 2045)

INTEREST - Rate of Interest on Loans on Loans and Advances sanctioned by the State Government - Interest rates for the year 2014 - 2015 - Orders - Issued.

------------------------------------------------------------

Read - the following paper:

G.O. Ms. No. 148, Finance (Loans and Advances Cell)
Department, dated 04.05.2013

******

**ORDER:**

Government direct that the rate of interest in various kinds of loans and advances by the State Government during the year 2014 - 15 shall be as shown below:-

| Sl. No. | | Class of Loan / Advance | Percvent per annum for the year 2014- 2015 |
|---|---|---|---|
| 1. | | **Loans to State owned Industrial / Commercial undertakings / Corporations, etc., including Financial Corporations and all other Local Bodies and Municipal Corporations:** | |
| | (a) | Plan Schemes for development purposes | 11.50 |
| | (b) | Other Schemes | 11.50 |
| | (c) | For capital formation and development purposes | 11.50 |
| | (d) | For working capital Support | 13.50 |
| | (e) | For ways & Means advances, advances including loans to cover cash deficits | 13.50 |
| | (f) | For Ways & Means advance to Tamil Nadu Civil Supplies Corporation Limited for Public Distribution System. | 10.00 |
| 2. | | **Loans to Co-Operative Institutions and Co-operative Banks like Land Development Bank.** | 10.00 |
| 3. | | **Loans to Government Servants** | |
| | | **(i) House Building Advance:** | |
| | | (a) For loans upto Rs. 50,000/- | 5.50 |
| | | (b) For loans from Rs. 50,001/- to 1,50,000/- | 7.00 |
| | | (c) For loans from Rs. 1,50,001/- to 5,00,000/- | 9.00 |
| | | (d) Above Rs. 5,00,000/- | 10.00 |
| | | **(ii) Conveyance Advance:** | |
| | | (a) For purchase of Motor car | 11.50 |

| | | | |
|---|---|---|---|
| | (b) | For purchase of Motor Cycle / Scooter | 9.00 |
| | (c) | For purchase of Bi-Cycle | 5.50 |
| | **(iii) Other Personal Loans to Government Servants:** | | |
| | (a) | For purchase of Computer | 10.00 |
| | (b) | Others | 10.00 |
| **4.** | **Other items:** | | |
| | Loans which are not covered in any specific category mentioned above | | 12.50 |
| **5.** | **Value of seized stock under Essential Commodities Act, 1955** | | 6.50 |
| **6.** | **Penal Interest** | | 2.50 |

2. The above rates will be applicable for all loans and advances being sanctioned during the year 2014 - 2015 and will have validity till the next revision is done by the State Government.

3. The rates of interest are general and will not apply to cases where reduced rates of interest have been sanctioned specially by the Government or where loans have been sanctioned by the Government free of interest. The Government may also sanction Ways and Means advances at special rates of interest taking into account, the cost of borrowing of the Government.

4. The mobilization advances to Contractors for World Bank assisted Projects wherein the standard bidding documents provide for exemption from paying of interest are however exempted from payment of interest.

5. The penal interest on all overdue installments of principal and interest will be at 2.50 per cent more than the normal rates of interest per annum.

6. Except in the case of loans to Government Servants, interest in all cases unless specifically indicated otherwise should be paid every Calendar quarter on the outstanding balance.

7. Even at the stage of sanction of loan, in the sanction order, the period of repayment, rate of interest and schedule of repayment with dates shall be indicated. In case, it is a permanent loan, a specific mention of this fact should be made in the sanction order itself.

(BY ORDER OF THE GOVERNOR)

K. SHANMUGAM

RINCIPAL SECRETARY TO GOVERNMENT

**GPF - Annual Account Statement - Value Added Service - Regarding**

**FINANCE (ALLOWANCES) DEPARTMENT**

**SECRETARIAT, CHENNAI - 600 009.**

**Letter No. 40490 / Allowances / 2014 - 1, Dated: 25.08.2014.**

From

Thiru T. Udhayachandran, I.A.S.,

Secretary to Government (Expenditure)

To

All Secretaries to Government,

All Heads of Departments.

Sir,

**Sub**: GPF - Annual Account Statement - Value Added Service - Reg.

**Ref:** (1) From the Principal Accountant General (A&E), Tamilnadu, Letter No. FM-I / I / AAS / e-mode / 2014-15 / 243 / 44706, dated: 15.07.2014.

(2) From the Principal Accountant General (A&E), Tamilnadu, Letter No. FM1/1/AAS / e-mode / 2014 - 15 / 333 - 56069, dated: 08.08.2014.

I am directed to invite your kind attention to the references cited and to inform that the General Provident Fund Annual Account Statements will be issued only as electronic copies through the website from the year 2014 - 2015.

2. All the Drawing and Disbursing Officers / Treasury Officers are also directed to accept the downloaded copies of the account slips for all purposes such as sanctioning of Temporary Advance / Part - final Withdrawal etc.,

Yours faithfully,

sd/-

for Secretary to Government (Expenditure)

---

**மூத்தப் பொறியாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.**








# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2045 மங்களகரமான ஜய வருடம் ஐப்பசி மாதம் 13-ஆம் தேதி (30.10.2014) வியாழக்கிழமை உத்திராட நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினம் காலை 7.30 மணிக்குமேல் 9.00 மணிக்குள் விருச்சிக லக்னத்தில்





வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், அரங்கல்துருகம் கிராமம், தெய்வத்திருவாளர்கள்
எல். பாலகிருஷ்ணன் நாயுடு - கண்ணம்மாள் இவர்களின் பௌத்திரனும், கடலூர்
பொறி. பா. அசோகன், B.E., - திருமதி. சந்திரிகா இவர்களின் ஏக குமாரனுமாகிய
திருநிறைச்செல்வன்

**Er.A. ராம்குமார், B.E., M.B.A.,**

**Manager - Sales & Marketing, ababil Health Care PVt., Ltd., Chennai.**

என்கிற வரனுக்கும்


கடலூர் நகரம், பீச்ரோடு, என்.ஜி.ஓ.நகர், தெய்வத்திருவாளர்கள்
ஆர். பெருமாள் நாயுடு - தனலெஷ்மி இவர்களின் பௌத்திரியும் திரு. பி. ராஜாராம் - ஹேமா
இவர்களின் இளைய குமாரத்தியுமான திருநிறைச்செல்வி

**R. நிர்மலா தேவி, M.Sc., I.T.,**

**TCS, Chennai**

என்கிற கன்னிகைக்கும்

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம், கடலூர் - 1, 8-A, பாரதி ரோடு **ஸ்ரீ திவான் பகதூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில்** நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.




**தங்கள் அன்புள்ள,**
**பொறி. பா. அசோகன், B.E.,**
உதவி செயற்பொறியாளர், பொ.ப.து., கடலூர்.
**திருமதி.சந்திரிகா அசோகன்**
34, ஜெயலட்சுமி நகர், கடலூர்.
செல்: 93676 12862.




பொறியியல் சங்கம்
நிறைவு விழா

# நூற்றாண்டு விழா நிகழ்வுகள்










நூற்றாண்டு நிறைவு விழாவில் தியாகச் செம்மல் சி.ப. சண்முகம்
அவர்கள் குடும்பத்துடன் கலந்துகொண்டார்.



Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**OCTOBER 2014**

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர்கள் சங்கம் வாழ்த்துத் தெரிவிக்கிறது



நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Published on 3.10.2014**
**Postng on 6.10.2014**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: **Er. D. MURUGESAN,** D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PUBLISHED BY: **Er. S. KANNAN,** D.C.E. B.E., PUBLICATION SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: **Mr. K.P.THIYAGARAJAN** AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5. PHONE: 2854 8223.